

தேனி வடக்கு மாவட்டம் போடி கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்பி.அய்யப்பன் இல்ல திருமண விழாவிற்கு வருகை தந்து மணமக்களுக்கு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்தனர். உடன் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணகுமார், சட்டமன்ற பொறுப்பாளர்கள் நேரு பாண்டியன் முத்துராமலிங்கம், மாவட்ட அவை தலைவர் பி.டி.செல்ல பாண்டியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், ஒன்றிய செயலாளர்கள், நகர செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் சார்பு அணி நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



மதுரையில் வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி முன்னிலையில் மேற்கு தொகுதி அ.தி.மு.க. இரண்டாம் பகுதி இளைஞரணி செயலாளர் கே.எம்.முருகன், மகளிர் அணி செயலாளர் வனிதா உள்ளிட்ட ஏராளமான அதிமுகவினர் அக்கட்சியிலிருந்து விலகி தலைமைச் செயற்குழு உறுப்பினர் வக்கில் பாலாஜி ஏற்பாட்டில் கழகத்தில் இணைந்தனர். இந்நிகழ்ச்சியின் போது பகுதி செயலாளர்கள் பழனிச்சாமி, சசிதேவா, வட்டச் செயலாளர் பாலாஜி, பொதுக்குழு முருகானந்தம் மற்றும் நிர்வாகிகள், கண்ணன், பாண்டியராஜன், ஆசைத்தம்பி உள்ளிட்ட பலரும் உடன் பங்கேற்றனர்.

### கோயம்புத்தூர் சர்வதேச விமான நிலையத்தின் பெயரை

# டாக்டர் கலைஞர் கருணாநிதி சர்வதேச விமான நிலையம் என்று மாற்ற ஒன்றிய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## மக்களவையில் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் வலியுறுத்தல்!



புதுடெல்லி, டிச. 18 - கோயம்புத்தூர் சர்வதேச விமான நிலையத்தின் பெயரை டாக்டர் கலைஞர் கருணாநிதி சர்வதேச விமான நிலையம் என்று மாற்ற ஒன்றிய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்களவையில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் வலியுறுத்தினார்.

டாக்டர் கலைஞர் என்று அழைக்கப்படும் முத்துவேல் கருணாநிதி அவர்கள் 1969 முதல் 2011வரை 5 முறை தமிழகத்தின் நீண்ட முதல்வராக இருபத்தைந்து ஆண்டுகள் பணியாற்றிய தமிழகத்தின் மூத்த அரசியல்வாதி. இவர் தமிழ் இலக்கியத்திற்காக ஆற்றிய பங்களிப்புகள் கதைகள், நாடகங்கள், நாவல்கள் மற்றும் பல தொகுதி நினைவுக் குறிப்புகளை எழுதியுள்ளார். முத்துவேல் கருணாநிதி அவர்கள் 14 வயதில் அரசியலில் நுழைந்தார், அவர் 1965 இல் இந்தி எதிர்ப்புப் போராட்டங்களிலும், சிறைவாசத்திலும் பங்கேற்றார். அவரது அரசியல் வாழ்க்கையில், மாநில சுயாட்சியை அதிகரிக்கவும், கீழ் சாதியினருக்கு ஆதரவாக உறுதியான நடவடிக்கைக் காகவும் வாதிட்டார்.

அரசு வேலை வாய்ப்பு மற்றும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு சாதி அடிப்படையிலான ஒதுக்கீட்டு முறையையும், ஏழைகளுக்கு மானியங்களையும் அமல்படுத்தினார். திருவள்ளுவரின் நினைவாக கன்னியாகுமரியில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலையை நிறுவுவதற்கும், தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்தை உறுதி செய்வதற்கும் அவர் முக்கியப் பங்காற்றினார். 2010 ஜூன் மாதம் கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை நடத்தினார். டாக்டர் கலைஞர் அவர்கள் 2018ம் ஆண்டு ஆகஸ்ட் 7ம் தேதி அன்று சென்னையில் காலமானார். அவர் இறக்கும் வரை, தமிழகத்தின் வளர்ச்சி மற்றும் நலனுக்காகவும், மாநிலம் முழுவதும் தமிழ் மொழியின் பரிணாம வளர்ச்சிக்காகவும் அவர் தனது வாழ்நாள் முழுவதும் பணியாற்றினார்.

எனவே, தமிழகத்தின் மகத்தான மக்கள் தலைவர்களில் ஒருவரும், நீண்ட காலம் தமிழக முதல்வராக பதவி வகித்தவருமான முத்துவேல் கருணாநிதி அவர்களின் புகழை போற்றும் வகையில் கோயம்புத்தூர் சர்வதேச விமான நிலையத்தின் பெயரை டாக்டர் கலைஞர் கருணாநிதி சர்வதேச விமான நிலையம் என்று மாற்ற ஒன்றிய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கணபதி ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

# கூட்டுறவு வங்கிகளின் மோசடிகள் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்?

## ஒன்றிய அரசுக்கு — கே.இ.பிரகாஷ் எம்.பி. கண்டனம்!



புதுடெல்லி, டிச.18 - கூட்டுறவு வங்கிகளின் விதிமீறல்கள், பணமோசடிகள் மீது திடமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா என்று நாடாளுமன்றத்தில் ஒன்றிய கூட்டுறவுத்துறை அமைச்சகத்திடம் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார். இதில், கூட்டுறவுத்துறை அறிமுகப்படுத்திய 'டிஜிட்டல்' முன்னெடுப்புகள் எப்போது பயன்பாட்டுக்கு வரும் என்ற கேள்வியும் அடங்கும்.

அமைச்சகத்தின் பதில்கள், இந்தப் பிரச்சனைகளுக்கு சரியான தீர்வு அளிக்கும் வகையில் இல்லை.

பெருகும் ஊழல்; ஆனால், நடவடிக்கை இல்லை:

கடந்த சில ஆண்டுகளாக, பல கூட்டுறவு வங்கிகள் பிரச்சனைகளில் சிக்கி, கோடிக்கணக்கில் மக்கள் டெபாசிட் செய்த பணம் ஏமாற்றப்பட்டிருப்பதாக ஊடகங்கள் பதிவு செய்துள்ளன. நியூ இந்தியா என்ற வங்கி மட்டும் 122 கோடி ரூபாய் மோசடி செய்துள்ளது.

இந்த சூழலில், கூட்டுறவு வங்கிகளின் தொடர் விதிமீறல்கள் மீதும், அவர்களின் பணமோசடி மீதும் எடுத்த நடவடிக்கைகள் என்ன என்ற கேள்விக்கு ஒன்றிய அரசு மௌனம் சாதித்துள்ளது.

டிஜிட்டல் திட்டங்கள் வெறும் அறிவிப்புகளாகவே இருக்கின்றன:

கூட்டுறவு வங்கித்துறைக்காக, *Sahkar Digipay*, *Sahkar Digiloan* ஆகிய இரண்டு திட்டங்களை ஒன்றிய அரசு கடந்த மாதம் அறிவித்தது. ஆனால், இதற்கான

செயற்பாட்டு வழிமுறைகள் வெளியிடப்படவில்லை. (*Operational Guidelines*) இன்னும் இதன் அர்த்தம், அந்த திட்டங்கள் வெறும் அறிவிப்புகளாகவே நீடிக்கின்றன என்பது. செயற்பாட்டு வழிமுறைகள் இல்லாமல் எந்த கூட்டுறவு வங்கியும், அவற்றை நடைமுறைப்படுத்த இயலாது.

இதற்கான தேதியைக் குறிப்பிட முடியுமா என்ற கேள்விக்கு முறையாக பதிலளிக்காமல், திட்டங்களின் நோக்கங்களை மட்டுமே ஒன்றிய அரசு பட்டியலிட்டுள்ளது.

மக்கள் நம்பிக்கையோடு பயன்படுத்த ஏதுவாகவும், அறிவிக்கப்பட்ட டிஜிட்டல் திட்டங்களை விரைவுப்படுத்தி மக்களுக்கு கூடுதல் பயனளிக்கும் வகையிலும், கூட்டுறவு வங்கிகள் பரிமாற்றம் அடைய வேண்டும். இதை விரைவில் செய்ய வேண்டியது, ஒன்றிய கூட்டுறவுத்துறையின் பொறுப்பு.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்தார்.

### டிஜிட்டல் முகவரித் தொழில்நுட்பக் கட்டமைப்பை மேம்படுத்த

# அறிவியல் நிறுவனங்களுடன் அஞ்சல்துறை ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளதா?

## மாநிலங்களவையில் — இரா.கிரிராஜன் கேள்வி!



புதுடெல்லி, டிச.18 - டிஜிட்டல் முகவரிக்கான தொழில்நுட்பக் கட்டமைப்பை மேம்படுத்த, அறிவியல் நிறுவனங்களுடன் அஞ்சல் துறை புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏதும் மேற்கொண்டுள்ளதா என தி.மு.க. எம்.பி. இரா.கிரிராஜன் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் நேற்று கலந்துகொண்ட இரா.கிரிராஜன், அஞ்சல் துறை மேம்பாடு குறித்து கேள்வி எழுப்பினார். அதில், டிஜிட்டல் முகவரிக்கான தொழில்நுட்பக் கட்டமைப்பை ஆவணப்படுத்துவதற்காக, அறிவியல் புதுமை மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பு (FSID), இந்திய அறிவியல் நிறுவனம் (IISC) ஆகியவற்றுடன், அஞ்சல் துறை ஏதேனும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதா என்றும், டிஜிட்டல் அஞ்சல் சேவைத் துறையில் கிளவுட் பேஸ்டு சேவையான AaaS மாடல் எதிர்கொள்ளும் சிக்கல்கள் மற்றும் சவால்களைக் குறைக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்து பேசிய ஒன்றிய இணை அமைச்சர் டாக்டர் சந்திரகுமார் பெம்மசானி, டிஜிட்டல் முகவரிக்கான தொழில்நுட்பக் கட்டமைப்புக்காக பல நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அறிவியல் புதுமை மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பு (FSID) மட்டுமின்றி, தொழில்நுட்ப தகவல்களுக்காக தேசிய தொலைதூர உணர்திறன் மையத்துடனும் (*National Remote Sensing Center*), விண்வெளி சார்ந்த தகவல்களுக்காக இஸ்ரோவுடனும்(ISRO), அறிவுசார் தகவல்களுக்காக தேசிய நகர்ப்புற விவகார நிறுவனத்துடனும் (*National Institute of Urban Affairs*) ஆகியவற்றுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளதாகவும், அவற்றுடன் ஆலோசனைகள் நடத்தப்பட்டுள்ளதால், எந்த எதிர்கால பிரச்சனையும் இல்லாமல் முழு அமைப்பும் மிகவும் வலுவாக உள்ளதாக தெரிவித்தார்.

### தொழிலாளர்களுக்கு விரோதமான 4 தொகுப்புச் சட்டங்கள் நடைமுறை!

# ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து நாடு தழுவிய ஆர்ப்பாட்டம்!

## சென்னையில் பொன்குமார் துவக்கி வைத்தார்!

சென்னை, டிச.18 – தொழிலாளர்களுக்கு விரோதமாகவும், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஆதரவாகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நான்கு தொகுப்பு சட்டங்களை ஒன்றிய மோடி அரசு நடைமுறைப்படுத்த உத்தரவிட்டுள்ளது.

இதனை கண்டித்து விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி நாடு அளவில் கண்டன போராட்டம் நடத்துகிறது. அதன் தொடர்ச்சியாக 15.12.2025 ராஜரத்தி னம் விளையாட்டு அரங்கின் அருகில் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டன போராட்டத்தை துவக்கி வைத்து விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி தலைவரும், கட்டுமானத் தொழிலாளர் நல வாரிய தலைவருமான பொன்குமார் கண்டன உரையாற்றினார்..

தமிழ்நாட்டில் முன்மாதிரி யாகவும், சிறப்பாகவும் செயல்படக்கூடிய கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் உள்ளிட்ட பல்வேறு வாரியங்களின் எதிர்காலம் கேள்விக் குறியாக உள்ளது.

இந்தச்சட்டம் நடைமுறைக்கு வந்தால் தொழிலாளர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்படும்.

நிரந்தரத் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு, ஒப்பந்தத் தொழிலாளர்கள் மற்றும் தினக்கூலித் தொழிலாளர்கள் எண்ணிக்கை உயர்த்தப்படும்.

விரும்பிய நேரத்தில் தொழிலாளர்களை முதலாளிகள் பணி நிக்கம் செய்ய முடியும்.

ஆண்டு கணக்கில் உலகளாவிய போரட்டங்களுக்குப் பின்பு 8 மணி நேர வேலை சட்டம் கிடைத்தது. அது தற்போது கேள்விகுறியாக்கப்பட்டுள்ளது.

எல்லா நிறுவனங்களி லும் பெண்கள் இரவில் பணியாற்றுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால் பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப் பட்டுள்ளது.

போன்ற தொழிலாளர்களுக்கு விரோதமான இந்த சட்டத்தை திரும்ப பெற கோரி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

15.12.2025 திங்கட்கிழமை காலை 10.30 மணி அளவில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு இளைஞரணித் தலைவர் வினோத் பொன்குமார் தலைமை தாங்கினார்.

வட சென்னை வடக்கு மாவட்டத் தலைவர் வி.எம்.நந்தகோபால், அமைப்புசாரா மாவட்டத் தலைவர் எஸ்.ஈசாக், வடசென்னை மேற்கு மாவட்டத் தலைவர் எஸ்.சீனிவாசன், சென்னை மேற்கு மாவட்டத் தலைவர் ஆர்.கே.செல்வம், தென் சென்னை தெற்கு மாவட்டத் தலைவர் கே.பஞ்சாட்சரம், வடசென்னை கிழக்கு அமைப்புசாரா மாவட்டத் தலைவர் பழக்கடை ராஜ், செங்கல்பட்டு மத்திய மாவட்டத் தலைவர் வி.சதாசிவம், வடக்கு மாவட்டத் தலைவர் எஸ்.குமார், திருவள்ளூர் கிழக்கு மாவட்டத் தலைவர் கே.வரதன், மத்திய மாவட்டத் தலைவர் ஆர்.கே.முனுசாமி, திருவள்ளூர் தென் கிழக்கு மாவட்டத் தலைவர் எம்.சிவகுமார், தெற்கு மாவட்டச் செயலாளர் ஆர்.பொன்னுசாமி, மேற்கு மாவட்டத் தலைவர் எம்.ஆர். மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த கண்டன ஆர்பாட்டத்தில் மாநில செயலாளர் எஸ்.எம்.குமார், தொழிற்சங்க கூட்டமைப்பின் மாநில பொதுச் செயலாளர் கவிஞர் குருநாகலிங்கம், விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் பொதுச் செயலாளர்கள் என்.சுந்தராஜ், பொறி.எஸ். ஜெகதீசன், துணைத் தலைவர்கள் பீ.கே.மூர்த்தி, என்.லட்சுமணன், எஸ்.இந்துமதி, தலைமை நிலைய செயலாளர் து.ரஜினிராஜ், இணைச் செயலாளர்கள் ஆர்.பானுகோபன், ஏ.வெற்றி செல்வன், ஏ.ஜெ.நாகராஜ், எஸ்.கார்த்திகேயன், மகளிரணிச் செயலாளர் இ.மணி மேகலை, பொருளாளர் பி.வரலட்சுமி, துணைத் தலைவர் எம்.செல்வமலர் உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.

# ஒழுங்கு நடவடிக்கை

## தலைமைக் கழக அறிவிப்பு!

விருதுநகர் வடக்கு மாவட்டம், நரிக்குடி தெற்கு ஒன்றிய தொண்டர் அணி அமைப்பாளர் வேல்முருகன் மற்றும் ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் திருமதி விஜயலட்சுமி ஆகியோர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018.
நாள்: 17-12-2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

# மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது!

நாகர்கோவில், டிச. 18 – கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டமானது 14.12.2025, ஞாயிறு அன்று நண்பகல் 12.00 மணிக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமை கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ”என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பணிகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.மதியழகன், பா.பாபு, மோ.பிராங்கிளின், த.செல்வன், ஏ.சுரேந்திரகுமார், பி.எஸ்.பி.சந்திரா, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் ச.சுந்தர்சிங், ஜெ.மிலன், நகர கழக செயலாளர் குமரி ஸ்டீபன், பகுதி கழக செயலாளர்கள் இ.ஜவகர், என்.பி.துரை, த.ஜீவா, எம்.சேக் மீரான் உட்பட பேரூர் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஒவ்வொரு வாக்கும் மிகவும் முக்கியம் என்பதனை உணர்ந்து (S.I.R.) பணிகளை சிறப்பாக செய்த தங்கள் அனைவருக்கும் பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்வதோடு தேர்தல் ஆணையம் மூலம் தற்போது நடைபெற்று வரும் தீவிர வாக்காளர் சிறப்பு சீர்திருத்த பணிகளில் புதிய தகுதியுடைய வாக்காளர்களாக 01.01.2026ம் தேதி 18 வயது பூர்த்தியாகும் அனைவரையும் வாக்காளர் பட்டியலில் இடம் பெறுவதற்கும் அவர்களது ஜனநாயக கடமைகளையாற்றுவதற்காக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட நாகர்கோவில், கன்னியாகுமரி, குளச்சல் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக செயலாளர், பேரூர், கிளை கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி பாக முகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி பாக குழு உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA) ஆகியோர் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து உரிய பணியாற்றிட வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ”என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற முன்னெடுப்பின் கீழ் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் தி.மு.க. நிர்வாகிகள் பங்கேற்று பொதுமக்களை சந்தித்து திராவிட மாடல் அரசின் சாதனைகளையும், திட்டங்களையும் எடுத்து கூற வேண்டும் எனவும், ஒவ்வொரு வாக்குச்சாவடியும் வெற்றி வாக்குச்சாவடி என்ற வகையில் பூத் கமிட்டி நிர்வாகிகள் பணியாற்றிட வேண்டும். மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக செயலாளர்கள் வாக்குச்சாவடி பாக முகவர்கள், டிஜிட்டல் பூத் ஏஜென்ட் நிர்வாகிகள் அனைவரும் ஒருங்கிணைந்து பணியினை மேற்கொண்டு கழக தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற வேட்பாளரை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்திட இன்றே தீவிரமாக களப்பணியாற்றிட வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ராஜா தேசிங்கு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு 11ஆம் வகுப்பு மாணவ – மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், திண்டிவனம் மாவட்ட கல்வி அலுவலர் உதயசூரியன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை உள்ளனர்.



தூத்துக்குடி வடக்கு மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி, விளாத்திகுளம் பேரூர் கழகம் பாகம் எண் 198 ராஜீவ் நகரில் நடைபெற்ற "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" நிகழ்வில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்க்கண்டேயன் கலந்து கொண்டார். நிகழ்வில் விளாத்திகுளம் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற தலைவர் சூர்யா அய்யன்ராஜ், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.